# பன்னல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பன்னல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சம்பள மீளளிப்பு என ரூபா 997,784 தொகை ஒன்று 2014 ஜனவரி மாதம் கிடைத்திருந்த போதிலும் அதனை ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த புதிய அலுவலர்கள் தொடர்பாக 2014 நவம்பர் மாதம் சம்பள மீளளிப்பு ஆகிய ரூபா 825,000 தொகை 2014 திசெம்பர் மாதம் கிடைத்திருந்த போதிலும் மீண்டும் நாட்குறிப்பு இலக்கம் 90 இன் மூலம் பெற வேண்டிய சம்பள மீளளிப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,000,496 தொகை எனினும் அதனை ரூபா 5,315,663 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் வருடத்திற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர்கள் ரூபா 4,315,167 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் நிலுவை மீதியில் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் கொடுப்பனவு செய்த ரூபா 900,000 இற்கான தொகையொன்று செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிதியக் கணக்கு வரவு வைத்தலுக்குப் பதிலாக ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடைகள் (108) செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டிற்கான செலவு மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதியில் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு செய்திருந்த ரூபா 200,000 தொகைக்காக மீளாய்வாண்டின் போதும் மீண்டும் நாட்குறிப்பு இலக்கம் 83 இன் மூலம் மீண்டும் கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான செலவு மற்றும் செலவுக் கொடுத்தோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனுக்காக நிதியத்தினால் அறவிடப்பட்ட ரூபா 1,569,421 இற்கான தண்ட வட்டி கடன் தொகை கொடுப்பனவு என கணக்கீடு செய்திருந்தமையால் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) வெடகெயாவ மற்றும் கதானே கெதர வர்த்தக கட்டிடத்தொகுதிகள் இரண்டில் 08 கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 1,523,934 இற்கான முற்கொடுப்பனவு (கீமணி) பணத்தை கடன்பட்டோர்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 430,718 இற்கான முற்பணங்கள் தீர்த்தலை முற்பணக் கணக்குகள் செலவு வைக்கப்படாமல் ஆண்டிற்கான செலவுக் கணக்கில் செலவு வைத்த காரணத்தினால் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

---------------------------------------------

சபையின் சேவையாற்றி ஓய்வபெற்ற உள்ளூராட்சி நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,312,679 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் இடையே ரூபா 18,294,387 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 224,704,174 தொகை ஆகும். அவற்றில் ரூபா 72,345,233 தொகைக்கான காலப்பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் காலப்

பகுப்பாய்வுகள் சமர்பிக்கப்பட்டுள்ள ரூபா 152,358,941 தொகையில் மொத்தமாக சுமார் 1% என ரூபா 1,523,589 தொகை 03 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் பெறுமதிகளாகும்.

(ஆ) பெற வேண்டிய கணக்குகளில் நிலுவையாகவுள்ள ஏனைய வருமானங்கள் ரூபா 66,220,140 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் காணப்பட்ட ரூபா 18,708,947 இற்கான தொகை 2009 ஆண்டு முதல் காணப்படுகின்ற மூலதன உதவி மீதி ஒன்றாக காணப்பட்டதுடன் மேலும் ரூபா 31,094,572 தொகை பெற வேண்டிய முத்திரை கட்டண மீதி ஒன்றாகும்.

(இ) பெற வேண்டிய கணக்கில் ரூபா 151,873,068 இற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 10,963,860 தொகை 2013 இற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியாகும்.

(ஈ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 183,017,168 ஆகும். அவற்றில் மொத்தமான 11% ஆகிய ரூபா 19,602,537 தொகை ஒன்று 03 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(உ) செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 12,683,768 தொகை பொதுவாக கடன்கொடுத்தோர் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 35% ஆகிய ரூபா 4,400,395 தொகை உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதியாகும்.

(ஊ) செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 145,756,327 இற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ஒன்று காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 15% ஆகிய ரூபா 21,469,732 தொகை 2013 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதிகளாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 25,505,584 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 17,530,159 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 326,037 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 17,204,122 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 242,443,846 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 219,895,405 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 40,078,600 மிகை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 125,644,344 தொகையில் ரூபா 92,437,977 உம் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அது சதவீதமாக மொத்தமாக 74% ஆகும். அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 242,443,845 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கியுள்ள பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 108,114,185 தொகையில் ரூபா 56,800,964 தொகை மொத்தமாக 53% என தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 84% ஆகிய ரூபா 47,772,908 தொகை சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வாடகை

-------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 1,031,551 தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் பல வருடங்களாக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 341,525 இற்கான மீதி ஒன்றும் காணப்பட்டது.

2.3.2 முற்கொடுப்பனவுப் பணம்

------------------------------------------

வெடகெயாவ மற்றும் கந்தானே கெதர வத்த தொடர்கட்டிடங்கள் தொடர்பாக முறையே ரூபா 539,236 தொகை மற்றும் ரூபா 991,727 இற்கான முற்கொடுப்பனவுத் தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

2.3.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 5,315,663 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 31,094,572 உம் காணப்பட்டது. இந்த நிலுவைகளில் நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 4,914,998 வரையும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,421,641 வரையும் 2015 ஜூன் 30 திகதி அளவில் குறைந்திருந்தது.

03. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் போது ரூபா 7,204,172 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வெடகெயாவ வர்த்தக தொடர்மாடிக் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டு இறுதியிலும் நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 06 கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையால் வாடகை அறவீடு செய்வதில் சிக்கல்கள் காணப்பட்டது.

(ஆ) 2011 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த கந்தானே கெதர வர்த்தக தொடர் கட்டிடத்தில் கீழ்மாடியிலுள்ள 10 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதி வரை அவற்றில் 03 கடைகளுக்கு மாத்திரம் கூறுவிலை கிடைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஜூன் 07 திகதி சபையில் நடைபெற்றிருந்த ரூபா 206,869 இற்கான பண மோசடி தொடர்பாக அப்போது பணத்திற்கு பொறுப்பாக இருந்த பிரதான முகாமைத்துவ உதவியாளரிடமிருந்து 50% அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவித்த போதிலும் மீதி 50% யாரிடம் அறவிடப்பட வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு